# இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணைகள்
## பிறப்பிப்பவர்: திரு.சங்கர் லால் குமாவத், இ.ஆ.ப.,

ந.க.வி3/33035/2017 நாள்: 27.01.2022

பொருள்: பணியமைப்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - இராமநாதபுரம் மாவட்டம் - கருணை அடிப்படை பணிநியமனம் - நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து 25.03.2017 அன்று பணியிடைக் காலமான திரு.அ.செந்தில்ராஜா என்பவரின் மனைவி / வாரிசுதாரர் திருமதி.கே.சரண்யா என்பவருக்கு இளநிலை உதவியாளர்/ஊர் நல அலுவலர் நிலை-2 பணிநிலையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:

1. திருமதி.கே.சரண்யா க/பெ அ.செந்தில்ராஜா(லேட்) என்பவரது விண்ணப்பம் நாள்: 30.03.2017
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), நயினார்கோவில் கடித ந.க.அ1/160/2017, நாள்: 13.07.2017.
3. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயலாணைகள் ந.க.வி3/33035/2017, நாள்: 16.10.2019
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள்: 23.01.2020.
5. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.வி3/33035/2017, நாள்: 04.02.2020.
6. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8808/2020/டி3, நாள்: 14.09.2020.
7. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 26.02.2020.
8. அரசு இணை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, தலைமைச்செயலகம், சென்னை கடிதம் ந.க. எண்.6895/இ3/2021-5 நாள்: 14.12.2021.
9. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18355 /2021/ டி2, நாள்: 18.12.2021.

* * * * *

**ஆணை:**

இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, நயினார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், உதவியாளராகப் பணிபுரிந்து 25.03.2017 அன்று பணியிடைகாலமான திரு(லேட்).அ.செந்தில்ராஜா என்பவரின் வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி.கே.சரண்யா என்பவருக்கு பார்வை 3-ல் காணும் செயலாணைகளின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 21.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 நிலையில் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 7-ல் காணும் அரசாணையின்படி, 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படும் எனவும், இவ்வாணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை 8-ல் காணும் அரசு கடிதத்தில், "இளநிலை உதவியாளர்" பதவிக்கான பணி நியமன அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) என்ற நிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் பணிநியமனம் வழங்கப்பட்டிருப்பினும், மாவட்ட ஆட்சித்தலைவர்களே இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்திட ஆணை வழங்கலாம் என தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் விவரப்படி வரப்பெற்ற முன்மொழிவு மற்றும் அசல் சான்றுகளின்படி, பணியிடைக்காலமான திரு(லேட்).அ.செந்தில்ராஜா என்பவரின் நேரடி வாரிசுதாரரும், மனைவியுமான திருமதி.கே.சரண்யா என்பவரால் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 30.03.2017 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அவரது பிறந்த தேதி 19.10.1988. பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரது வயது 28 ஆகும். அவர் இடைநிலைக் கல்வி இறுதி வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். தனியருக்கு பணிநியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் இல்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், தனியரால் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குரிய உடற்தகுதி சான்று Civil Assistant Surgeon நிலைக்கு குறையாத மருத்துவ அலுவலரிடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி திருமதி.கே.சரண்யா என்பவரது அசல் ஆவணங்கள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு தனியருக்கு 16.10.2019 அன்று கருணை அடிப்படையில் மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளர் / ஊர் நல அலுவலர் நிலை-2 பணிநிலையில் பணி நியமனம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. தனியர் பணி நியமனத்திற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப்பணியில், இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் /ஊர் நல அலுவலர் நிலை-2 பதவியில் சேர்ந்த நாளான 21.10.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது. தனியரது பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் /ஊர் நல அலுவலர் நிலை-2 ஆக பணியமர்த்தப்பட்ட திருமதி.கே.சரண்யா என்பவரின் பணி வரன்முறை செய்து உத்தரவிடப்பட்ட விபரத்தினை தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு, இவ்வலுவலகத்திற்கு நகலிடவும், இவ்வாணையினை தனியருக்கு சார்பு செய்து சார்பு நகலினை அனுப்பி வைக்கவும் தொடர்புடைய அலுவலகத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சியருக்காக,
இராமநாதபுரம்.

பெறுநர்

திருமதி.கே.சரண்யா,
இளநிலை உதவியாளர்/ ஊர் நல அலுவலர் நிலை-2,
ஊராட்சி ஒன்றியம், மண்டபம்.
(உரிய வழிமுறையாக)

நகல்:

1. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ/கி.ஊ), மண்டபம்.
3. வி3 இருப்புக்கோப்பு.